# சிலப்பதிகாரத்தில் கூத்தர்களின் வாழ்வு நிலை

முனைவர்.**திருமதி.வீ.முத்துலட்சுமி**,
தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர்,
தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி
muthulakshmi-tam@sfrcollege.edu.in - 8940033551.

DOI 10.5281/zenodo.14912240.

## Abstract :

Although Ilangovadigal has called Silappadhikaram “a poem that is sung by the people of the country”, scholars are very fond of calling it a drama or a three-Tamil poem. The reason for this is that there is a lot of information about the structure of the poem and the arts of the poem. Silappadhikaram has not only been made into a film twice, but it is also being performed by various groups in the form of a play and dance. Many people have also written literary plays based on the Silappadhikara story. For example, the Silappadhikara drama written by poet K. Thirumeni can be mentioned. Some people have taken a couple of chapters and written them as one-act plays. A fragmented version of the Silambam is still being performed in the form of a ‘Kovalan Kathiya’ in small villages. Therefore, looking at all this, it can be said that Silappadhikaram is a collection of koothukalanjam. Koothuks were appreciated during the period of the double Kappadhikara. Koothuks were also prosperous. This can be described as the period when the influence of the Kuthas reached its peak.

**Key Words :** Koothu - Koothambalam - Talaikoli - Adarangu - Talaikolithanam - Koothapalli - Nayagam Pathi -Ezhini

## முன்னுரை :

இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை “நாட்டுதும் யாம் ஓர் பாட்டுடைச் செய்யுள்” என்று கூறியிருந்தாலும் சான்றோர் அதனை நாடகக் காப்பியம், முத்தமிழ்க்காப்பியம் என்றழைப்பதில் பெரும் விருப்பம் கொள்கின்றனர். அதற்குக் காரணம் காப்பிய அமைப்பும், காப்பியத்தின்கலைகள் தொடர்பாக நிறையச் செய்திகள் இருப்பதுமே காரணமாகும்.

சிலப்பதிகாரம் இருமுறை திரைப்படமாக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல், நாடக வடிவில் நாட்டிய வடிவம் கொண்டு பல்வேறு குழுக்களால் ஆடப்பட்டு வருகிறது. சிலப்பதிகாரக் கதையை அடிப்படையாகக் கொண்டு பலர் இலக்கிய நாடகங்களும்


http://Creativecommons.org//license/by/4.0/.

எழுதியுள்ளனர். சான்றாக, புலவர்.கு. திருமேனி எழுதிய சிலப்பதிகார நாடகத்தைக் கூறலாம். ஒரு சிலர் ஓரிரு காதைகளை எடுத்து ஓரங்க நாடகங்களாக எழுதியுள்ளனர்.

சிலம்பின் சிதைந்த ஓர் அமைப்பு இன்றும் ‘கோவலன் கதையாகச்’ சிற்றூர்களில் கூத்து வடிவில் நடிக்கப்பட்டு வருகிறது. எனவே இவை அனைத்தையும் பார்க்கும்பொழுது சிலப்பதிகாரம் ஓர் கூத்துக்களஞ்சியமாகத் திகழ்கிறது எனலாம். இரட்டைக் காப்பியக் காலத்தில் கூத்துக்கள் போற்றப்பட்டன. கூத்தர்களும் வளம் பெற்றிருந்தனர். கூத்தர்களின் செல்வாக்கு உச்சத்தை அடைந்திருந்த காலம் என்று இதனைக் குறிப்பிடலாம்.

ஆடல், பாடல், அழகு இம் மூன்றிலும் குறைவுபடாத மாதவி என்ற ஆடல் நங்கையின் ஆடல் அரங்கேற்றம் பற்றி ‘அரங்கேற்றக்காதை’ குறிப்பிடுகிறது. கூத்துக்கள் அரங்கேற்றம் செய்யப்படும் இந்நாடக மேடையின் அமைப்பை,

“ஓவிய விதானத்து உரைபெறு நித்திலத்து
மாலைத் தாமம் வளையுடன் நாற்றி
விருந்து படக் கிடந்த அருந்தொழில் அரங்கத்து”1

எனச் சிற்பக் கட்டடக் கலை வல்லுநர்கள் வகுத்து வைத்துள்ள விதிமுறைகள் குறையாது, அரங்கம் அமைத்து இருந்த பாங்கினைச் சுட்டுகிறது.

பலவகையான கூத்துக்களைப் பற்றிய செய்திகளைச் சிலப்பதிகாரத்தின் துணைகொண்டு அறிந்துகொள்ள முடிகின்றது.

“இருவகைக் கூத்தின் இலக்கணம் அறிந்து
பல்வகைக் கூத்தின் விலக்கினிற் புணர்த்து”2

என்ற பகுதிக்கு அடியார்க்கு நல்லார் இருவகைக் கூத்து என்ற நிலையில் இரண்டு இரண்டாக முரண்பட வரும் ஆறுபிரிவுகளைக் குறிப்பிடுகிறார். இவை தவிர சிலம்பில் வரும் ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை போன்ற பாடல்கள் கதை தழுவி வரும் கூத்து வகைகளாகவே அமைந்து இன்பம் நல்குகிறது.

**திறவுச் சொற்கள்**

கூத்து-கூத்தம்பலம்-தலைகோலி-ஆடரங்கு-தலைக்கோலிதானம்-கூத்தப்பள்ளி-நாயகம் பத்தி-எழினி


http://Creativecommons.org//license/by/4.0/.

**கூத்துக்களின் வளர்ச்சி**

சங்கம் மருவிய காலத்தின் பிற்பகுதியில் கூத்தர்கள் தொழில் திறமை உள்ளவர்களாகக் காட்டப்பட்டுள்ளனர். சிலப்பதிகாரத்தில் கூத்துக்கலைக்கு மட்டும் விளக்கமளித்ததோடு குழலாசிரியன், யாழ்ப்புலவன், ஆடலரங்கம், தலைக்கோல் வழங்கும் நிலை, வாரப்பாடல் அமைப்பு, இசை முழக்கம் போன்றவற்றிற்கும் இலக்கணம் கூறுகிறது. தேசிக் கூத்து, மார்க்கக் கூத்து இவற்றோடு மாதவியாடிய பதினோரு ஆடல் வகைகள் ஆகிய அனைத்தையும் எடுத்தியம்பி இன்பமூட்டுகின்றன.

இவற்றைத் தவிர்த்த ஏனைய பகுதிகளில், இந்திரவிழாவில் கலைஞர்களின் பங்கு, மாதவி காவிரியை நோக்கிப் பாடிய முகம் உடைவரி, ஆற்று வரி, சார்த்து வரி, முகச்சாத்து, முகம்இல்வரி, காலை வரி, நில வரி, முரிவரி மயங்குதிணை நிலவரி, வேட்டுவவரி, வள்ளிக்கூத்து, வென்றிக்கூத்து, ஊர்சூழ்வரி, வாழ்த்துப்பகுதி போன்ற வரிப்பாடல் வகைகளுக்கும் விளக்கம் தந்து, நாட்டியம் நன்றாக அமைய வேண்டுமாயின் நாட்டிய மங்கை எவ்விதப் பயிற்சி பெற்றிருக்க வேண்டும் என்பதையும் விளக்குகையில்,

“மீத்திறம் படாமை வக்காணம் வகுத்துப்
பாற்பட நின்ற பாலைப் பண்மேல்
நான்கின் ஒரீஇய நன்கணம் அறிந்து”3

மங்கலப் பண்ணாகவும் நரம்படைவுடன் நிற்கும் பாலைப்பண்ணை அதன் அழகு கெடாதபடி நான்கு உறுப்பும் சேர்ந்த சொற்களை நன்கு அறிந்து தாளத்திற்கு ஏற்ப அவிநயம் பிடித்து பாடல்களுக்கு இசைய அழகு நடம் ஆடக்கூடிய திறமை மிக்கவளாக மாதவியானவள் அரங்கேற்றுக்காதையில் காட்டப்படுகிறாள்.

**தலைக்கோலி பட்டம் பெறுதல்**

மாதவியின் நடனமானது நாட்டிய நூற்களில் கூறும் விதிமுறைப்படி, குற்றம் குறைவில்லாது அமைந்திருந்தது. எனவே அவளுடைய நடனத்தைக் கண்டமன்னன் தலைக்கோலி பட்டம் அளித்துச் சிறப்பித்தான் என்பதை,

“நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்துக்
காட்டினள் ஆதலின் காவல் வேந்தன்


http://Creativecommons.org//license/by/4.0/.

இலைப் பூங்கோதை இயல்பினில் வழா அமைத்
தலைக்கோல் எய்தித் தலை அரங்கு ஏறி"4

என்பதன் மூலம் தலைக்கோலி என்ற சிறந்த ஆடல் நங்கைக்குரிய பட்டத்தைப் பெற்றதுடன் ஆயிரத்தெட்டுக் கழஞ்சுப் பொன்னும் பரிசாக மாதவி பெற்றதை சிலம்பு சுட்டுகிறது.

ஆக சிறந்த நடனமங்கைக்கு பட்டமும் பரிசும் கொடுக்கும் பழக்கம் சிலப்பதிகாரம் காலத்தில் காணப்பட்டுள்ளது. இன்று திருவிழாக்களில் கரகாட்டம் ஆடும் பெண்களுக்கு ரூபாய் கொடுக்கும் பழக்கம் காணப்படுவது அதன் மிச்சமாகக் கூட இருக்கலாம் எனக் கருதத்தோன்றுகிறது.

**சிலம்பில் ஆடல் கலைஞருக்குரிய இருப்பிடம்**

இக்காலத்தில் 'நாடக மேடை' என்று வழங்கப்படும் இடமானது அந்நாட்களில் "ஆடுகளம்", "ஆடரங்கு", "ஆடிடம்" என்பன போன்ற சொற்களால் குறிக்கப்பட்டிருந்தது.

இது, சிறப்பாகத் 'தலைக்கோலி தானம்' என்ற பெயரால் குறிக்கப்பட்டது. கூத்து நிகழ்வதற்கு முன் தொடக்கத்தில் தலைக்கோல் ஒன்றை நிறுவிவைத்தல் பழங்கால மரபாதலால் இப்பெயர் பெற்றது.

தலைக்கோல் என்பது, புகழ்மிக்க மன்னர்கள் போரில் வெல்லப்பட்டால் அவர்தம் வெண்கொற்றக் குடைக்காம்பை எடுத்து வந்து அதனின்றும் செய்யப்படும் கோல். இதனை இந்திரன் மகன் சயந்தனாக எண்ணிப் புண்ணிய நதிகளின் நீரைப் பொற்குடங்களில் முகந்து வந்து நீராட்டி மலர் மாலைகள் சூட்டி, மந்திர விபூதியால் பூசித்து ஆடலாசிரியன் உள்ள அரங்கில் வைப்பது மரபாகும்.

**ஆடரங்கள்**

"அரங்கம் அமைக்கப்படும் அளவு ஏழு கோல் அகலமும் எட்டுக்கோல் நீளமும் ஒரு கோல் குறட்டுயரமும் உடையது. கூத்து மேடையின் மீது தூண்களை நாட்டி உத்தரப் பலகைகளைப் பற்றி அரங்கை நிர்மாணித்தனர். அரங்கத்திற்கு உள்ளே போகவும், வெளியே வரவும் இரண்டு வாயில்கள் இருந்தன"5


http://Creativecommons.org//license/by/4.0/.

அரண்மனையைச் சார்ந்த நாடக அரங்கம் “கூத்துப்பள்ளி” எனவும் கோயில்களைச் சார்ந்த நாடக அரங்கம் “கூத்தம்பலம்” எனவும் வழங்கப்பெற்றன.

நாடகம் நிகழும் தலைமை இடம் “நாயகம் பத்தி” எனப் பெயர் பெற்றது. நடிகர்கள் தங்குவதற்கு அரங்கின் பக்கத்தில் அமைக்கப்பட்டிருந்த இடத்தினைக் “கண்ணுளர் குடிளைப் பள்ளி” என்றனர். நாடகமாடும் இடத்திற்குக் “களரி” என்ற பெயரும் உண்டு.

கூத்துக்கள் பெரும்பாலும் இராக்காலங்களில் நடந்தமையால் அரங்குகளில் பெரும் விளக்குகள் வைக்கப்பட்டிருந்தன. ஆடுவார் நிழல் அரங்கில் பட்டு மறையாதவாறு பெரிய நிலை விளக்குகளாக இவை வைக்கப்பட்டிருந்தன.

எதிரில் அமர்ந்து கூத்துக் காண்போர்களின் இருக்கை “அம்பலம்” என்ற பெயரால் வழங்கியது. அரங்குகள் பலவித வண்ண மணிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்ததோடு சித்திர விதானத்தையும் கொண்டிருந்தன. கூத்து நடைபெறும்போது ஆடுவோர், பாடுவோர், ஆட்டி வைக்கும் ஆசிரியர், இசைக்கருவியாளர் ஆகியோர்க்குத் தனித்தனி இடங்கள் அமைக்கப்பட்டிருந்தன என்பதை,

“இயல்பினில் வழாஅ இருக்கை முறைமையின்
குயிலுவ மாக்கள் நெறிப்பட நிற்ப”6

என்ற வரிகள் சான்று காட்டுகின்றன.

**திரையமைப்பு**

ஆடலரங்கில் மூவகைத் திரைகள் கட்டப்பட்டிருந்தன. “எழினி” என்ற சொல் திரையைக் குறித்தது. மூவகை எழினிகள்: ஒரு முக எழினி, பொரு முக எழினி, கரந்து வரல் எழினி என்பதை,

“ஒருமுக எழினியும் பொருமுக எழினியும்
கரந்து வரல் எழினியும் புரிந்துடன் வகுத்து ஆங்கு”7

சிலம்பு எடுத்துக்காட்டுகிறது. அரங்கின் இடப் புறத் தூணில் உருவு திரையாகக் கட்டப்பெற்றது ஒருமுக எழினி. இருபுறமும் பிரிந்து ஒதுங்கிச் செல்லும் அமைப்புடையது பொருமுக எழினி. மேலிருந்து வேண்டும் போது விடப்படவும், வேண்டாத போது நீக்கவும் தக்க


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

அமைப்பில் கட்டப் பெற்றிருப்பது கரந்து வரல் எழினி. இது இக்காலத்திலுள்ள Rolling Backdrop போன்றது. இதனை 'எந்திரஎழினி' எனவும் குறித்தனர்.

**தோரிய மடந்தை**

தோரிய மடந்தையர் எனப்படும் மகளிர் ஆடலரங்கில் ஒருமுக எழினியின் பக்கத்தில் இருத்தல் மரபு ஆகும். ஆடல் வல்ல மகள் ஒருத்தி, தன் வயது முதிர்ந்த போது ஆடலை விடுத்து வாரம் பாடுதலை மட்டும் மேற்கொள்வதுண்டு.

இளமங்கையர் ஆடும்போது அதைக் கண்ணுற்றுக் குற்றம் இருந்தால் அகற்றுவதற்கும், சிறப்புக் காணப்படின் அதனை எடுத்துக்கூறி உற்சாகப்படுத்துவதற்கும், இசைப் பாடல்களை ஆடல் மகளின் கால்; தாளத்திற்கேற்ப ஒத்தளந்து பாடுதற்கும் இவர்கள் அரங்கில் இடம் பெற்றிருந்தனர் என்பதை,

"ஆடி முதிர்ந்த பின்பு பாடன் மகளாய் ஆடன் மகளின்
காலுக்கு ஒத்தளந்து பாடுங்கால் இடத்தூண் சேர்ந்தியலுமவள்"8

எனவரும் அடியார்க்கு நல்லார் உரைப்பகுதியால் அறிகின்றோம். 'தோரியம்' என்ற சொல் கூத்து எனப் பொருள்படும். கூத்தில் வல்ல மடந்தையர் "தோரியமகளிர்" எனப்பட்டனர். இவர்களை,

'வாரம்பாடும் தோரிய மடந்தை'9

எனச் சிலப்பதிகாரம் சுட்டுகின்றது. நாடகம் தொடங்குவதற்குச் சற்று முன் "அந்தரக்கொட்டு" என்னும் ஒருவகைக் கூத்தை ஆடுவது வழக்கமென்பதைச் சிலப்பதிகாரத்தால் அறியலாம். மக்களின் மனத்தைக் கவர்வதற்கும் கூட்டத்தைக் கூட்டுவதற்கும் இது நிகழ்த்;தப்பட்டது போலும்.

எனவே கூத்துக் கலைஞர்களில் தோரிய மகளிர் சிறப்பான இடத்தில் வைத்துப் பார்க்கப்பட்டன. தன் கூத்துக்கலையானது சிறப்பாக அமைய அவர்கள் குற்றங்களைக் கலைந்தும், சிறப்புக்களை எடுத்துக்கூறி ஆடல் மகளிரை உற்சாகப்படுத்தியும் ஓர் நல்லாசிரியனாய், வழிகாட்டியாய் விளங்கியுள்ளனர் எனலாம்.

**உலகம் உவக்கும் கலைத்திறமை மிக்க ஆடல் நங்கை**


http://Creativecommons.org//license/by/4.0/.

ஆடல் நங்கையாகத் திகழக் கூடியவர் ஆடல், பாடல், அழகு என்ற மூன்றிலும் குறைவுபடாது இருந்தாலும் தன்னுடைய பாட்டாலும் கூத்தாலும் காண்போர் உவக்கும் வண்ணம் தன்னுடைய திறமையை வெளிப்படுத்த வேண்டும். 'மாதவி' எனும் ஆடல் நங்கை தலைக்கோலி பட்டம் பெற்றதோடு, எண்ணையும் எழுத்தையும் இயற்றமிழின் ஐந்து வகையினையும், இசைத் தமிழின் நான்கு கூறுகளையும் நாடகத் தமிழின் பதினோரு வகைக் கூத்தினையும் குறைவில்லாது மண்ணகம் புகழும் வண்ணம் அரங்கேற்றினாள் என்பதை அரங்கேற்றுக்காதை வெண்பாவானது எடுத்துக்காட்டுகிறது.

"எண்ணும் எழுத்தும் இயல் ஐந்தும் பண் நான்கும்
பண்ணின்ற கூத்துப் பதினொன்றும் - மண்ணின்மேல்
போக்கினாள் பூம்புகார்ப் பொற்றொடி மாதவிதன்
வாக்கினால் ஆடரங்கில் வந்து"10

ஆக சிலப்பதிகார காலத்தில் கூத்தாடுவோரின் வாழ்க்கை நிலையானது கலைத் திறமையை வெளிக்காட்டுவதில் தான் சிறப்பாக அமைந்துள்ளது. ஆடல் மகளிர் ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் கற்று துறைபோகியவராகக் காட்டப்படுகின்றனர்.

சாதாரணமான மனிதனோ பெண்ணோ கூத்தாட முடியாது என்பதும் அது மிக உயர்ந்த உன்னதக் கலையாகவும் திகழ்ந்துள்ளது என்பதும் ஈங்கு புலனாகிறது.

மாதவியாடிய பதினோரு வகை ஆடலிலும் ஆடலுக்குத் தகுந்தவாறு உடையணிந்து அதில் வரும் பாத்திரமாகவே தன்னை மாற்றிக் கொண்டான் என்பதும் சாதாரண நிகழ்ச்சியன்று. அதற்கு முழுமையான ஈடுபாடு வேண்டும். அப்படிப்பட்ட அனைத்துத் திறமைகளும் தகுதிகளும் ஒருங்கே பொருந்தியவள்தான் மாதவி எனும் நடன மாது. எனவே கூத்தாடும் பெண்கள் மிகவும் திறமைசாலிகளாகவே சிலம்பில் சிறப்பு பெறுகின்றனர்.

**தவசீலர்களையும் தன்வயப்படுத்தும் ஆற்றல் உடையவர்கள்**

கூத்தியர் வாழும் வீதிகளில் தலைக்கோல் பட்டம் பெற்ற ஆடல் அழகிகளுடன், பின்பாட்டுப் பாடுபவரும், வாத்தியம் இசைப்பவரும், ஆடத் தொடங்குமுன் பாடும் கூத்;தியும், ஆட்டத்தின் இடை இடையே பாடும் கூத்தியும் நான்கு வகைப்பட்ட பலரும் விரும்பும் ஆயிரத்து எட்டுக் கழஞ்சுப் பொன் அன்றாடம் பெறும் உரிமை உடைய அழகிய பெண்களும்


http://Creativecommons.org//license/by/4.0/.

இருந்தனர். இவர்களின் கண்வலைப்பட்டு, பெறுதற்கு அரிதான நல்லறிவு பெற்றவரும் அறிவு அழிந்து அவர்பின் அலைவர். தவசீலர்கள் தங்கள், நிலை மறந்து, வாசமலர் தோறும் சென்று தேனுண்டு மயங்கும் வண்டு போல் இப்பெண்டிர் பின் திரிந்து பெருமை இழந்தனர் என்பதை,

“வாரம் பாடும் தோரிய மடந்தையும்
தலைப்பாட்டுக் கூத்தியும் இடைப்பாட்டுக் கூத்தியும்
நால் வேறு வகையின் நயத்தகு மரபின்
-----------------------
-----------------------
அரும்பெறல் அறிவும் பெரும்பிறிது ஆக
தவத்தோர் ஆயினும் தகைமலர் வண்டின்”11

என்ற சிலம்பு வரிகளிலிருந்து அறிவதோடு, கூத்தியர் கூத்தாடும் தொழிலை மட்டும் செய்யாமல், ஆடவரைத்தம்பால் ஈர்ந்து அவர்களிடம் பொருள்களைப் பெறும் பொருட்பெண்டீராகவும் விளங்கியமையை அறியலாம்.

ஆகவே இப்படிப்பட்ட பகட்டான ஆடையும் அணிகலனும் அணிந்து வாழும் இவர்களுக்குகெனத் தனியான வீதிகள் அமைந்துள்ளன. அது குடும்பப் பெண்கள் வாழும் இடங்களை விட்டு ஒதுக்கமாக அமைக்கப்பட்டு இருந்தன என்பதும் வெளிப்படையாகத் தெரிகிறது.

**ஆடல் மகளிர் வாழும் வீதிகள்**

ஆடல் வல்ல மகளிர் வாழும் வீதிகளானது உயர் குடியினரும் முடி மன்னரும் கூடத் தங்கி வாழும் சிறப்புடையவையாகத் திகழ்ந்தது இவர்களது மாளிகைகள். இவர்களின் கலைத்திறனை உணர்ந்து மன்னன் இவர்களுக்கு ஏதும் தண்டனை வழங்கவில்லை போலும். ஆகவே குற்றம் செய்தோர் தம் தலையில் சுட்ட செங்கலை ஏற்றிச் சுமக்கச் செய்வது இவர்கள் வாழும் தெருவில் நிகழவில்லை என்பதை,

“சுடுமண் ஏறா வடுநீங்கு சிறப்பின்
முடி அரசு ஒடுங்கும் கபுமனை வாழ்க்கை”

என்ற சிலம்பு வரிகள் சிறப்பிக்கின்றன.


http://Creativecommons.org//license/by/4.0/.

**முடிவுரை**

இவ்வாறு சமுதாயத்தில் கூத்துக்கலையும் கூத்துக்கலைகலைஞரும் சிறப்பான இடம் பெற்றுஇருந்ததைச் சிலம்பு மூலம் நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

**குறிப்புகள்**

1. சிலம்பு, 3; 111-113.
2. மேலது, 3; 12-13.
3. மேலது, 3; 147-150.
4. மேலது, 160-163.
5. சிலம்பு. உ.வே.சா.பதிப்பு (1960) அடியார். உரை. 3:105.
6. மேலது, 3; 130-131.
7. மேலது, 3; 109-110.
8. மேலது, 6:19.
9. மேலது, 14:155.
10. சிலம்பு, அரங்கேற்றுக்காதை, வெண்பா.
11. மேலது, 14; 146-147.


http://Creativecommons.org//license/by/4.0/.